அலகு
6

# பக்தி இயக்கம்

HXXTCZ

## கற்றல் நோக்கங்கள்

- பக்தியின் விளக்கம், வகைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்
- பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள், பக்தி இயக்கத்தின் சீரிய தன்மை போன்றவற்றைத் தெரிந்துகொள்ளுதல்
- நாயன்மார்களின் சமயப்பணி மற்றும் தமிழ்ப்பணி ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்
- ஆழ்வார்களின் சமயப்பணி மற்றும் தமிழ்ப்பணி ஆகியவற்றை மாணவர்கள் அறிந்துகொள்ளுதல்
- இடைக்கால இந்தியாவின் பக்தி இயக்க ஞானிகள் பரப்பிய பக்திக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ளுதல்
- சூபியிசம் அதன் தன்மைகள் பற்றிப் புரிந்துகொள்ளுதல்
- நாதயோகா பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ளுதல்

## நுழைவு வாயில்

மனிதன் மனிதனை நல்வழிப்படுத்துவதற்கு, இந்துசமயம் பல்வேறு நெறிமுறைகளை உருவாக்கித் தந்துள்ளது. இந்நெறிமுறைகள் மனிதனின் உள்ளம், சிந்தனை, செயல்திறன் ஆகியவற்றிற்கேற்ப வேறுபடுகின்றன. அவரவர் மனநிலைக்கு எந்த நெறி எளியது, இனியது என்று தோன்றுகிறதோ அதனைப் பின்பற்றி நல்வழி அடையலாம். இத்தகைய பல நெறிகளுள் மிகச் சிறப்பாகக் கருதப்படுவன 1) பக்திநெறி 2) கருமநெறி 3) ஞானநெறி 4) யோக நெறி ஆகியனவாகும். இந்நெறிகளுள் மிகவும் எளிமையானது பக்திநெறியாகும்.

இறைவனிடத்தில் நாம் செலுத்தும் 'ஆழ்ந்த அன்பே' பக்தி எனப்படுகிறது. பக்தி என்ற சொல் '**பஜ்**' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. இதற்கு 'வழிபாடு' என்று பொருள். மேலும் பக்தி என்பது, உள்ளார்ந்த அன்போடு இறைவனை வழிபடுதல் என்ற பொருளைத்தரும். எனவே, பக்திநெறி ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

பக்திநெறிக்கு அடிப்படையாகத் திகழ்வன சமயங்களாகும். எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான கொள்கைகள் உண்டு. மனிதனுக்குப் பிறப்பால் மட்டுமே உயர்வில்லை என்று எல்லா சமயங்களும் கூறுகின்றன. சடங்குகள், சம்பிரதாயங்கள் மனிதர்களுக்குத் தேவையில்லை. இறைவன்மீது தூய பக்தி கொள்ளுதலே வாழ்வின் சிறந்த வழியாகும். தூய பக்தியும் ஆழ்ந்த நம்பிக்கைகளும் பக்தி மார்க்கத்தின் கோட்பாடுகளாகும். இந்தப் பக்தியே அன்பு, எளிமை போன்றவற்றைப் போதித்து, மனிதன் வீடுபேறு அடைய வழிவகுக்கிறது.



XII Ethics_Lesson 6.indd 149 16-03-2020 15:01:18

## பக்தியின் வகைகள்

பக்தி இருவகைப்படும் அவை 1) அபரபக்தி 2) பரபக்தி என்பதாகும். இவ்விருவகைகளும் பக்தனின் இருவேறுபட்ட மனநிலையைப் பிரதிபலிக்கின்றன.

- **அபரபக்தி:-** பக்தன் தெளிவில்லாமல் குறுகிய சிந்தனையுடன் குறிப்பிட்ட ஒரு கடவுளை மட்டுமே வழிபாடு செய்வது அபரபக்தி ஆகும். தன் சுயநலத்தையோ, தன்னைச் சார்ந்தோரின் சுயநலத்தையோ மையப்படுத்தி, ஒருவன் பக்தி என்ற பெயரில் மற்றவர்களை வெறுக்கிறான். தான் வழிபடும் தெய்வத்தையும், வழிபாட்டு முறையையும் தவிர பிற தெய்வத்தையும், வழிபாட்டு முறையையும் அபரபக்தியினர் ஏற்பதில்லை.
- **பரபக்தி:-** இந்நிலையில் பக்தன் அனைத்துத் தெய்வங்களையும் வழிபடுவதுடன் பக்தியின் உயர்ந்த நிலையில் செயல்படுகிறான். உலகம் தழுவிய அன்பு நெறியே பரபக்தியாகும். இவ்விரு நெறிகளும் தொன்றுதொட்டு வந்தவையாகும்.

## பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள்

- இந்து சமயம், தன் செல்வாக்கை படிப்படியாக இழக்கத் தொடங்கியது.
- உயர் குடியினராகக் கருதப்பட்டவர்கள், பிற பிரிவினரிடம் பாகுபாடு காட்டினர்.
- சமண, பௌத்த சமயங்கள் இந்து சமயத்தில் காணப்பட்ட சடங்குகளை வெறுத்தன. எளிதாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நெறிகளை எடுத்துக் கூறிப் பின்பற்றச் செய்தன.
- சமயக் கோட்பாடுகள், பாமர மக்கள் புரிந்துகொள்ளும்படி அமையவில்லை.
- பிற சமயத்தவர்கள் வெளிப்படையாக அறிவித்துச் செயல்பட்ட 'ஒரு கடவுள் கோட்பாடு', 'உலகில் பிறந்தவர்கள் அனைவரும் உடன் பிறந்தோரே' என்ற கொள்கைகள் மக்களைக் கவர்ந்திழுத்தன.
- பிற சமயங்களில் காணப்பட்ட சமத்துவக் கோட்பாடுகள், இந்து சமயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களையும் கவர்ந்தன.

## பக்தி இயக்கத்தின் சீரிய தன்மை

- பல்வேறு வடிவங்களில் கடவுளை வணங்கினாலும் அவை அனைத்தும் 'கடவுள் ஒருவரே' என்று பக்தி இயக்கம் வெளிக்காட்டியது.
- தெளிவான ஆன்மிகக் கோட்பாடுகள், முறையான பக்திநெறி ஆகியவற்றின் வாயிலாக, ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்பவர்கள், வீடுபேற்றை அடையலாம் என்று பக்தி இயக்கம் வலியுறுத்தியது.
- இறைவனை அடைய நல்வழிகாட்டலும், நல்லுபதேசமும் வழங்கும் குருவின் துணை அவசியம்.
- கடவுளின் முன் அனைவரும் சமம், மனிதர்களிடையே பிறப்பால் உயர்வு தாழ்வில்லை என்பதை உணர்த்துகிறது.
- சமூகத்தில் நிலவிய சாதி வேறுபாடுகள், மூடப்பழக்கவழக்கங்கள் ஒழிக்கப்படுவதற்குப் பக்தி இயக்கம் காரணமாயிற்று.
- பக்தி இயக்கஞானிகள், வேத இலக்கியங்களை வட்டார மொழியில் மொழிபெயர்த்ததன் மூலம் அவற்றைப் பாமர மக்களும் அறியும்படி செய்தனர்.
- ஒற்றுமை உணர்வு, சமய நல்லிணக்கம் ஆகியவை வலிமைபெற, பக்தி இயக்கம் பெரும் பங்காற்றியது.
- பக்தி நெறியைப் பின்பற்றுவதன் மூலம் மக்களிடையே மன அமைதி ஏற்பட்டது.
- மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் இன்ப, துன்பங்களில் எவ்வித வேற்றுமையுமின்றிப் பங்கேற்றனர்.
- இறைவனிடம் பக்தன், தன்னையே அர்ப்பணிக்கும் சரணாகதித் தத்துவக்கோட்பாடு பக்தி இயக்கத்தால் வலுப்பெற்றது.

- ஞானநெறி, கர்மநெறி, யோகநெறி ஆகிய நெறிகளைவிடப் பக்திநெறியே சிறந்தது என்ற ஆன்மிகக் கருத்து வலியுறுத்தப்பட்டது.
- கடவுளை இடைவிடாது வழிபடவேண்டும், அவரின் திருநாமத்தை ஓதுதல் வேண்டும் என்ற நன்னெறியைப் பக்தி இயக்கம் பரப்பியது.
- துறவிகளால் பக்திநெறியைப் பரப்ப ஏற்படுத்தப்பட்ட மடங்கள் பக்தி இயக்கத்தின் கோட்பாடுகளால் முறைப்படுத்தப்பட்டன.

## நாயன்மார்கள்

சைவ சமயத்தைப் பின்பற்றிச் சிவ வழிபாட்டையும், தமிழ் மொழியையும் வளர்த்த 63 சிவனடியார்கள், 'நாயன்மார்கள்' எனப்பட்டனர். இவர்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள். இவர்களுள் திருநாவுக்கரசர். திருஞானசம்பந்தர். சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் **சமயாச்சாரியார்கள்** என்றும் **சைவ சமயக் குரவர்கள்** என்றும் அழைக்கப்பட்டனர். தேவாரத் தொகுப்பில் முதல் எட்டுத் திருமுறைகளை இவர்கள் பாடியுள்ளனர். நாயன்மார்களின் பாடல்களைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்பவராவார். பிற்காலச் சோழர்கள் காலத்தில் வாழ்ந்த சேக்கிழார் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து அருளினார்.

இத்தொகுப்பே பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர்புராணம் என்றழைக்கப்படுகிறது. இவர்கள், தம் எளிய வாழ்க்கைமுறையால், தியாக மனப்பான்மையால் மக்களிடம் அன்புநெறி, அருள்நெறியினைப் பரப்பியவர்கள் ஆவர்.

## பன்னிரு திருமுறைகள்

திருஞான சம்பந்தர் – **1, 2,3 திருமுறைகள் (திருக்கடைக்காப்பு)**
திருநாவுக்கரசர் – **4,5,6 திருமுறைகள்**
சுந்தரர் – **7–ஆம் திருமுறை**
} **தேவாரம்**

மாணிக்கவாசகர் – **8–ஆம் திருமுறை – திருவாசகம்**

திருமாளிகைத்தேவர், சேந்தனார் மற்றும் அருளாளர்கள் பாடல்கள். – **9–ஆம் திருமுறை – திருவிசைப்பா, திருப்பல்லாண்டு**

திருமூலர் – **10–ஆம் திருமுறை – திருமந்திரம்**

திருவாலவாயுடையார், பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார், நம்பியாண்டார் நம்பி பாடல்கள் – **11–ஆம் திருமுறை – தோத்திரப் பாடல்கள்**

சேக்கிழார் – **12–ஆம் திருமுறை – பெரியபுராணம்.**

## திருஞானசம்பந்தர்

சோழநாட்டில் சீர்காழியில் சிவபாத இருதயர் என்பாரின் மகனாகத் திருஞானசம்பந்தர் பிறந்தார். தமது மூன்றாவது வயதில், இறைவி உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றார். சைவ சமயத்தைப் பரப்ப, இவர் தமிழகத்தின் பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். வடமொழி வேதங்களின் முக்கிய கருத்துகளைத் தாம் இயற்றிய பக்திப் பாடல்களில் பயன்படுத்தினார். இந்த அடிப்படையில் வேதத்தின் சாரங்கள் தமிழில் கொண்டுவரப்படுவதில் முக்கியப் பங்காற்றினார். தேவாரத்தில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியுள்ளார். இவர் சமணர்களை வென்று சைவசமயத்தை நிலைநாட்டினார்.

## திருஞான சம்பந்தரின் அற்புதங்களாகக் கீழ்க்காணும் நிகழ்வுகளைச் சைவ மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. அவையாவன:

- மயிலாப்பூரில் இறந்த பெண்ணின் எலும்பை எடுத்து பெண்ணுருவாக்குதல்.
- சம்பந்தர் பதிகத்தால் திருமறைக்காடு (வேதாரண்யம்) சிவாலயத்தின் கதவுகள் திறக்கப்படுதல்.
- திருவோத்தூரில் (செய்யாறு) ஆண்பனையைப் பெண்பனையாக்குதல்.



XII Ethics_Lesson 6.indd 151 16-03-2020 15:01:19

- திருக்கொள்ளம்புதூரில் பதிகம்பாடி ஓடத்தை ஓடச்செய்தல்.
- வைகையாற்று நீரினை எதிர்த்தோடும்படி செய்தல்.
- பாண்டிய நாட்டிற்குச் சென்று, மாறவர்மன் அரிகேசரியைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றியதுடன் சமணர்களை அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றில் வெற்றி பெறுதல்.
- மதுரையில் போதிமங்கை என்ற இடத்திற்கு சென்று, பௌத்தர்களை வாதத்தால் வெல்லுதல். இதுவே பௌத்தர்கள் பலரைப் பௌத்தத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறக் காரணமாயிற்று.

திருஞான சம்பந்தரின் பாடல்கள் இசைத்தமிழின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. இவர் தம் பக்திமார்க்கத்தைக் கையாண்ட நிகழ்வு '**ஞானமார்க்கம்**' எனப்படுகின்றது.

சிவபெருமான் பற்றிக் கீழ்க்காணும் செய்திகளை இவரது பாடல்கள் கூறுகின்றன.

### அவையாவன:

- சிவபெருமானே முழுமுதற்கடவுள்
- அவர் பிறப்பு, இறப்பு இல்லாதவர்
- உலகத்திலும் உயிர்களிடத்திலும் ஒன்றாகவும், வேறாகவும், உடலாகவும் இருப்பவர்.
- உயிர்களின் பிறவிப் பிணியைத் தீர்ப்பவர்.
- தம்மை வந்தடைவர்களின் இன்னல்களை நீக்கி, வீடுபேறு தருபவர்
- தாம் இன்புறுவதுபோல், பிற உயிர்களையும் இன்புறச் செய்பவர்.
- தம்மை (சிவனை) எந்நேரமும் நினைக்கும் மனப்பாங்கைத் தரக்கூடியவர்.

## திருநாவுக்கரசர்

மருள்நீக்கியார் என்ற இயற்பெயர் கொண்ட இவர், திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார் – மாதினியார் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். சமண சமயத்தைத் தழுவிய பிறகு **தருமசேனர்** என்றும் அழைக்கப்பட்டார். சம்பந்தரால் **அப்பர்** எனவும் அழைக்கப்பட்டார். சூலைநோயால் தாக்கப்பட்ட இவர், தம் சகோதரி திலகவதியாரால் சமணத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டு சூலைநோய் நீங்கப்பெற்றார். பல அற்புத செயல்களுக்குப் பின், பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று, பதிகங்கள் பாடி, சைவ சமயத்தையும் தமிழிலக்கியத்தையும் வளர்த்தார்.

## திருநாவுக்கரசரின் அருஞ்செயல்கள்

- திருமறைக்காட்டில் அடைக்கப்பட்டிருந்த சிவாலயக் கதவினைப் பதிகம்பாடி திறந்தார்.
- பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன், இவரைச் சுண்ணாம்பு நீற்றறையில் வைத்தும், விஷம் கொடுத்தும், யானையை விட்டு இடறச்செய்தும், கல்லில் கட்டி கடலில் எறிந்தும் கொடுமைப்படுத்தினார். ஆனால், சிவனருளால் அத்தனை கொடுமைகளிலும் திருநாவுக்கரசர் உயிர் பிழைத்தார். பிறகு உண்மையறிந்த மன்னனே சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறினார். பின், இம்மன்னன் திருப்பாபுலியூரில் இருந்த சமணப்பள்ளியை இடித்து, அக்கற்களைக் கொண்டே திருவதிகையில் குணபர ஈஸ்வரம் என்ற சிவாலயத்தைக் கட்டினார்.
- திருத்தூங்கானை மாடத்தில் தமது தோளில் ரிஷப, சூல முத்திரைகளைப் பொறித்தார்.
- அப்பூதி அடிகளாரின் மகனைப் பாம்பு தீண்ட, சிவனருளால் திருநாவுக்கரசர் அவ்விஷத்தை நீக்கி அருளினார்.
- திருவையாற்றில் சிவபெருமானின் கைலாயக் காட்சியைக் கண்டுகளித்தார்.

## திருநாவுக்கரசரின் சமயப்பணி

இவருடைய பக்தி நெறி 'தொண்டுநெறி' எனப்படுகிறது. ஆலயத்திற்கும், மக்களுக்கும்,



XII Ethics_Lesson 6.indd 152 16-03-2020 15:01:19

தொண்டு செய்வதன் மூலம் சிவனருளைப் பெறலாம் என்றார். பாழடைந்து காணப்பட்ட சிவாலயங்களையும், அவற்றின் சுற்றுப்புறத்தையும் தூய்மைப்படுத்த **உழவாரப்படை** என்ற குழுவை அக்காலத்திலேயே ஏற்படுத்தினார். இதன் மூலம் திருநாவுக்கரசர் பக்தி நெறிக்குத் **தொண்டு வடிவம்** கொடுத்தார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கருத்தைத் தெரிவித்ததன் மூலம் சைவ சமயத்தின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றார். திருப்பூந்துருத்தியில் ஒரு சைவ மடத்தை நிறுவினார்.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> வடம் என்ற சொல்லிற்கு ஆலமரத்தடி என்று பொருள். கோயிலின் ஆலமரத்தடியில் ஓம் என்ற பிரணவ மந்திரத்துடன் நடைபெறும் பூசையே வடதளிபூசை என்பார் உ.வே. சாமிநாதர்.

## திருநாவுக்கரசர் தமிழிலக்கியத்திற்கு ஆற்றிய பணி

திருநாவுக்கரசர் தேவாரத்தில் 4, 5, 6 – ஆம் திருமுறைகளைப் பாடியுள்ளார். இவர் தாண்டகம் என்ற இலக்கிய வகையைக் கையாண்டதால் '**தாண்டகவேந்தர்**' என்று அழைக்கப்பட்டார். இவர் நாகப்பட்டினம் அருகே திருப்புகலூர் என்ற இடத்தில் முக்தியடைந்தார். இவர் சைவ சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உதவும் வகையில் பதிகங்களைப் பாடியுள்ளார். தம் பதிகங்களில், பத்து வகைப் பண்களைப் பயன்படுத்தியுள்ளார். இவர் எழுதிய '**நாமார்க்கும் குடியல்லோம்**' என்று தொடங்கும் பாடல் பிற்காலத்தில் மகாகவி பாரதியார் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்ற பாடல் எழுதக் காரணமாக அமைந்தது எனலாம். சிவபெருமானைத் தவிர, வேறு யாருக்கும் தான் தலைவணங்குவதில்லை என்று தம் பாடல்களில் பாடியுள்ளார். சிவபெருமான் தம்முள் இருப்பதால் நரகத்தையும், எமனையும் ஒரு பொருட்டாகவே தாம் கருதுவதில்லை என்று கூறினார். இறைவனின் திருவடியே தமது நிழல் என்கிறார். அந்த அடிப்படையில் இவர் பாடிய பாடல்

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறைபொய்கையும்போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே*

சுண்ணாம்பு நீற்றறையிலிருந்து வெளியேறிய பின், இப்பாடலிலிருந்து இவர் சிவபெருமானின் மீது கொண்டிருந்த பற்றை அறியமுடிகிறது.

## சுந்தரர்

இவர், சடையனார் – இசைஞானியார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். இளமையிலேயே சிவபக்தியிலும் தமிழ்ப்பற்றிலும் சிறந்து விளங்கினார். இவரது திருமணத்தின்போது, இறைவன் அடிமை ஓலையைக் காட்டி இவரைத் தடுத்தாட்கொண்டார். பக்தி மார்க்கத்தில் '**சகமார்க்கம்**' என்ற நட்பு மார்க்கத்தைப் பின்பற்றினார். இறைவனையே தம்தோழராகக் கருதியதால் '**தம்பிரான் தோழர்**' என்றழைக்கப்பட்டார். இவர் தேவாரத்தின் ஏழாம் திருமுறையைப் பாடியுள்ளார். இவருடைய பதிகங்கள் ஆழ்ந்த இறைபக்தியையும், தமிழின் இலக்கியச் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன. இவர் திருத்தொண்டத் தொகையையும் அருளினார். இந்நூல் 60 தனியடியார்களையும், 9 தொகையடியார்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. பிற்காலத்தில் இந்நூலை மூலமாகக் கொண்டே சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது. சித்தவமடம் என்ற இடத்தில் இறைவனின் திருவடி சூட்டப்பெற்ற இவர் தமிழகத்தின் பல இடங்களுக்குச் சென்று சிவாலயங்களில் பதிகங்களைப் பாடியுள்ளார்.

## சுந்தரரின் அருஞ்செயல்கள்

- நாகப்பட்டினம் அருகே திருக்குண்டையூரில் இவர் நெல்மலை பெற்றார்.



XII Ethics_Lesson 6.indd 153 16-03-2020 15:01:19

- திருப்புகலூரின் செங்கல்லை பொன்னாக்கினார்.
- திருமுதுகுன்றத்தில் இறைவன் அளித்தபொன்னை ஆற்றில் போட்டுத் திருவாரூர் கமலாலய குளத்தில் எடுத்துக்கொண்டார்.
- திருவொற்றியூரில் சங்கிலியாரையும், திருவாரூரில் பரவை நாச்சியாரையும் மணந்தார்.
- திருவையாற்றில் காவிரி நீரின் வெள்ளத்தைத்தடுத்து வழிவிட பதிகம் பாடினார்.
- அவிநாசியில் முதலைவாய் பிள்ளையை மீட்டருளினார். சுந்தரர், தம்மைச் சிவபெருமானின் அடிமை என்று கூறுகிறார். அவருடைய இக்கருத்தைப் பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

*பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா*
*எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை*
*வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்துறையுள்*
*அத்தாவுனக் காளாய்இனி அல்லேன் எனலாமே*

*பாடல் எண்: 7.1.1*

## சுந்தரரின் பதிகங்கள் மூலம் அறியலாகும் செய்திகள்

- சிவபெருமானே எல்லா உயிர்களுக்கும் தலைவர்.
- அருளையே செல்வமாக உடையவர்.
- பிறப்பில்லாத அவர் பிறவிப் பிணியையும் தீர்ப்பவர்.
- தான், இன்ன தன்மை என்று உயிர்களால் அறியப்படாதவர்.
- ஓராயிரம் பேரும் உடையவர்.
- ஆண், பெண் என எந்த வடிவமும் இல்லாதவர்
- சிவனடியார் செய்யும் பிழைகளைப் பொறுத்துக் கொள்பவர்

## மாணிக்கவாசகர்


மாணிக்கவாசகர்

திருவாதவூரில் பிறந்து வரகுணப் பாண்டியன் என்ற மன்னனிடம் அமைச்சராக இருந்தவர். திருப்பெருந்துறையில் குருவருள் பெற்றுத் **திருவாசகம்**, **திருக்கோவையார்** ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். சைவ சமயத்தின் சிறப்பைப் பரப்ப, தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் சென்று பதிகம் பாடினார். சிவபெருமானே

**சப்தவிடங்கத்தலங்கள்:** சோழநாட்டில் நாயன்மார்களால் பாடல்பெற்ற ஏழு சிவத்தலங்கள் சப்தவிடங்கத் தலங்கள் எனப்படுகின்றன. அவை:

| தலம் | விடங்கர் | இறை நடனம் |
|---|---|---|
| 1. ஆரூர்(திருவாரூர்) | வீதி விடங்கர் | அஜபா நடனம் |
| 2. திருநள்ளாறு | நகரவிடங்கர் | உன்மத்தநடனம் |
| 3. திருநாகைகாரோகணம்(நாகை) | சுந்தரவிடங்கர் | வீசிநடனம் |
| 4. திருகாறாயில் (திருக்காரவாசல்) | ஆதிவிடங்கர் | கூக்குடநடனம் |
| 5. திருகோளிலி(திருக்குவளை) | அவனிவிடங்கர் | பிருங்க நடனம் |
| 6. வாய்மூர் (திருவாய்மூர்) | நீலவிடங்கர் | கமல நடனம் |
| 7. திருமறைக்காடு (வேதாரண்யம்) | புவனவிடங்கர் | ஹம்சபாதநடனம் |


XII Ethics_Lesson 6.indd 154 16-03-2020 15:01:19

முதன்மையான கடவுள் என்ற கருத்தையே தன் பக்திமார்க்கமாகக் கொண்டார். சிவபெருமானே பஞ்சபூதமாக இருப்பவன். எங்கும் நிறைந்திருப்பவன் என்பதைப் பின்வரும் தமது பதிகத்தின் மூலம் உணர்த்துகிறார்.

*வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி*

*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்*

*கோனாகி யான் எனது (என்(று) அவர் அவரைக் கூத்தாட்டு*

*வான்ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே*

*(பாடல் எண்: திருவாசகம் -14)*

### மாணிக்கவாசகரின் அருஞ்செயல்கள்

- தில்லையில் பௌத்தர்களை வாதத்தில் வென்றார்
- ஊமைப்பெண்ணைப் பேசுமாறு செய்தார்
- நரிகளைப் பரி (குதிரை)களாக்கினார்
- வைகை நதியை வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்தார்.
- பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டார்.

### மாணிக்கவாசகரின் பாடல்களின் வாயிலாக அறியலாகும் செய்திகள்

- சிவன் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள்
- பிறரால் இன்ன தன்மையன் என அறியமுடியாதவன்
- ஆண்,பெண் என்ற வடிவில்லாதவன்; ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற தொழில்களைச் செய்பவன்.
- உயிர்களின் பிறப்பை நீக்குபவன்
- பிறப்பு இறப்பு இல்லாதவன்

### திருநீலகண்டர்

திருநீலகண்டர் தில்லையில் வாழ்ந்தவர். இளமையும் அருந்ததிக்கு நிகரான கற்புமிக்க மனைவியிருந்தும், இன்பத் துறையில் எளியராய் பரத்தைபால் சென்று வந்தார். அதைக் கண்ட அவர் மனைவியார், "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டமென்றார்".

இறைவன் மீது ஆணை கேட்ட பெரியவர், எம்மை என்றதனால் மற்ற பொது மாதர்களையும் என் மனத்தினாலும் தீண்டேன் என்று கூறி விலகினார். மாதர் மீது வைத்த காதலை அறவே துறந்து இறைவன் மீது வைத்த பேரன்பினைப் பெரிதாய் மதித்ததால் இவர் போற்றப்பட்டார். இவ்விரதத்தை இனிது பேணிய இவரது இறை அன்பின் திறத்தை, உலகிற்கு அறிவித்து இறைவன் அருள் புரிந்தான். உலக இன்பங்களில் இறையின்பமே ஏற்றமுடையது என்பதை, இவரது வரலாறு நமக்கு விளக்குகிறது.

**திருவாசகம்:** மாணிக்கவாசகர் எழுதிய ஒப்பற்ற சைவ நூல் திருவாசகம். இந்நூல் எட்டாம் திருமுறையாகும். இந்நூலில் 51 திருப்பதிகங்களும் 656 பாடல்களும் உள்ளன. சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திரு அகவல் என்று நான்கு பெரும் பகுதிகளைத் திருவாசகம் கொண்டுள்ளது. ஜி.யு.போப் என்ற மேலைநாட்டு அறிஞர் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். "**திருவாசகத்திற்கு உருகார், ஒரு வாசகத்திற்கும் உருகார்**" என்ற முதுமொழி இந்நூலின்பெருமையைஉணர்த்துகின்றது. இந்நூல், இறையாகிய பரம்பொருளை நாடுபவர்கள் பெறவேண்டிய பேரியல்புகள், அவற்றை வளர்க்கும் முறைகள், அருள் வேட்கை கொள்ளுதல், அருளைப் பெறுதல், பக்தியைப் பெருக்கி இறைவனோடு இரண்டறக்கலத்தல் ஆகிய நிலைகளைக்கூறுகிறது.

புல்லாகிப் பூடாய்...... என்ற பாடல் வரிகள் பல்வகை உயிரிகளின் பரிணாம வளர்ச்சியை விரிவாகக் கூறுகின்றன. 'மானுடப் பிறப்பினுள் மாதா உதிரத்து ஈரமில் கிருமி செறிவினில் பிழைத்தும்' எனத் தொடங்கும் பாடலடிகள் கருவியல்(Embrology) அறிவை நன்கு தெரிவிக்கின்றன.



XII Ethics_Lesson 6.indd 155 16-03-2020 15:01:19

## மெய்ப்பொருள் நாயனார்

இவர் சிவனடியாரைப் போன்று மாறுவேடம் பூண்டுவந்த முத்தநாதனை வரவேற்று அவனிடம் உபதேசம் பெறக் காத்திருந்தார். ஆனால் அவன் தன் புத்தகப்பையினை அவிழ்ப்பது போன்று அதிலிருந்த ஆயுதத்தால் இவரைத் தாக்கியபோதும் சிவனடியார் போல் வந்ததன் காரணத்தால், அப்போதும் உடலில் ரத்தத்துடன் சிவமெனக்கூறி அவனைத் தொழுது நின்றதிலிருந்து சிவனடியார்களைச் சிவனாகவே கருதும் இவரது உயர்ந்த பண்பு வெளிப்படுகிறது. இவரை '**வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்**' என்று திருத்தொண்டத்தொகை கூறுகிறது.

## அதிபத்தநாயனார்

அதிபத்தர் என்ற சொல்லிற்குச் சிறந்த பக்தர் என்று பொருள். இவர் திருநாகைக்காரோகணம் (நாகப்பட்டினம்) என்ற ஊரில் பிறந்தவர். இளமை முதலே சிவபெருமானின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். தாம் பிடித்த மீன்களில் ஒன்றைத் தினமும் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் ஒரு மீன் மட்டுமே கிடைக்கிறது. (சிவபெருமானின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று) அம்மீனையும் சிவனுக்கே அர்ப்பணம் செய்த அதிபத்த நாயனார் சிவனருள் பெற்றதாகவும் சைவ மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. வறுமையிலும் பசியிலும் வாடிய பொழுதும் தான் பிடித்த ஒற்றை மீனைக்கூட சிவபெருமானிற்கு அர்ப்பணம் செய்து இறையருள் பெற்றார்.

> அதிபத்தர் இறைவனுக்கு தங்கமீனை அர்ப்பணிக்கும் விழா – நாகப்பட்டினம் காயாரோகண சுவாமி கோயிலில் ஆவணி மாதம் இவ்விழா நடைபெறுகிறது. அன்று அதிபத்தர் உற்சவர் சிலையை ஒரு கட்டுமரத்தில் எழுந்தருளச் செய்கிறார்கள். கட்டுமரத்தில் உற்சவர் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்கிறார். அப்போது மீனவர்கள் வலையில் தங்கமீனை வைத்து கட்டி கடலில் பிடித்தது போன்று கூறுவார்கள். இது அதிபத்தர் தங்கமீனைப் பிடித்ததாகக் கொள்ளப்படும். அவ்வேளையில் சிவபெருமான் கடற்கரையில் எழுந்தருளும்போது தங்கமீனை அவருக்குப் படைத்துப் பூசை செய்வார்கள். இறுதியில் சிவபெருமான் அதிபத்தருக்கு முக்தி தரும் நிகழ்வு நடைபெறும்.

## கண்ணப்ப நாயனார்

திண்ணன் என்ற இயற்பெயர் கொண்டவர். இவர் நாணன், காடன் ஆகியோரோடு வேட்டையாடச் சென்றபோது சிவலிங்கம் ஒன்றைக் கண்டு, அச்சிவலிங்கத்திற்கு நீரால் அபிஷேகம் செய்தும், மலர்கள், இலைகளைக் கொண்டு அர்ச்சனை செய்து இறைச்சியை லிங்கத்திற்குப் படைத்தும் வந்தார். இதனைக் கண்ட அந்தணர் ஒருவர், திண்ணனின் செய்கையை எதிர்த்தார். திண்ணனின் உண்மையான பக்தியை அந்தணனுக்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான், சிவலிங்கத்தின் கண்ணிலிருந்து குருதி வரச்செய்தார். அதைக் கண்ட திண்ணன் தன் இரு கண்களையும் பிடுங்கி, அந்த லிங்கத்தின் மீது வைத்துப் பொருத்தியதால், கண்ணப்பன் என்று சிவபெருமானால் அழைக்கப்பட்டதையும், அவருக்குச் சிவனருள் கிடைத்தாகவும் சைவ சமய மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன.

## காரைக்கால் அம்மையார்

புனிதவதி என்ற இயற்பெயர் கொண்டவர். காரைக்காலில் பிறந்து பரமதத்தன் என்பவரை மணந்தார். இவர் சிவத்தொண்டிலும் சிறந்து விளங்கினார். இவர் இசைத்தமிழால் இறைவனை வணங்கினார். தமிழுக்கு '**அந்தாதி**' என்ற இலக்கியமுறையை அறிமுகம் செய்தார். **அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்தத்திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை**



XII Ethics_Lesson 6.indd 156 16-03-2020 15:01:19

போன்ற நூல்களை அருளினார். கணவன் ஒரு நாள் கொடுத்தனுப்பிய மாம்பழத்தைச் சிவனடியார்க்குப் படைத்துவிட்டார். அந்த மாம்பழத்தினை கணவன் கேட்க, இறைவனிடம் வேண்டி மாம்பழத்தைப் பெற்றார். இந்நிகழ்வு காரைக்காலில் **மாங்கனித் திருவிழாவாக** ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

### மங்கையர்க்கரசியார்

காரைக்காலம்மையாரைப் போல இவரும் ஒரு பெண் நாயன்மார் ஆவார். திருஞானசம்பந்தரை திருமறைக்காட்டிலிருந்து பாண்டிய அரசவைக்கு அழைத்ததில் இவரே முக்கிய பங்கு வகித்தார். திருஞானசம்பந்தர், பாண்டிய மன்னனான தம் கணவன் மாறவர்மன் அரிகேசரியைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்ற இவரே காரணமாவார்.

### இசைஞானியார்

சுந்தரின் தாயாரான இவர், சிவனருள் பெற்ற பெண்மணியாவார். சுந்தரர் இறைநெறிப்படி வளர்க்கப்பட்டதில் இவருக்கு முக்கிய பங்குண்டு.

### சந்தனாச்சாரியார்கள்

மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரும் சந்தனாச்சாரியார்கள் என்றழைக்கப்படுகின்றனர். '**சந்தானம்**' என்ற சொல்லிற்கு வம்சாவழி, பரம்பரை என்று பொருள்படும். சந்தானம் அகச்சந்தானம், புறச்சந்தானம் என்று இரு வகைப்படும்.

### அகச்சந்தானம்

அகச்சந்தானத்தார் கயிலைமலையில் வாழ்வோராவர். இவர்கள் ஸ்ரீகண்ட பரமசிவனிடம் சிவஞான உபதேசம் பெற்றவர்கள். நந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசனங்கள், பரஞ்சோதியார் ஆகியோர் அகச்சந்தான பிரிவை சார்ந்தவர்களாவர்.

### புறச்சந்தானம்

பரஞ்சோதி முனிவரிடம் மெய்கண்டதேவரும், மெய்கண்டதேவரிடம் அருணந்தி சிவமும், அருணந்தி சிவத்திடம் மறைஞான சம்பந்தரும் ஆன்மிக அறிவு பெற்றனர். மெய்கண்ட தேவர் **சிவஞானபோதம்** என்ற நூலையும், அருணந்தி சிவாச்சியாரியார் **சிவஞான சித்தியார், இருபா இருஃபது** ஆகிய நூல்களையும், உமாபதிசிவம் சிவப்பிரகாசம் முதலிய '**சித்தாந்த அஷ்டகம்**' என்ற எட்டு நூல்களையும் எழுதினர்.

### நாயன்மார்களின் சமயத் தொண்டு

- பக்தி நெறியை வளர்க்க, நாயன்மார்கள் பெருந்துணை புரிந்தனர்.
- திருநாவுக்கரசர் போன்ற நாயன்மார்கள் சமயப்பணிக்கே தம்மை அர்ப்பணித்ததுடன் சமூகப் பணியும் செய்தனர். ஆலயங்களின் தூய்மையிலும், சமயச் சடங்குகளுடன் குடமுழுக்கு நடத்துவதிலும் நாயன்மார்கள் முக்கிய பங்கு வகித்தனர்.
- ஆண், பெண் சமத்துவத்தைச் சைவ சமயத்தில் நிலவச்செய்ததன் மூலம் சமூகத்திலும் சமத்துவம் நிலவ வழிகாட்டினர்.
- சைவ சமய நெறிமுறைகளையும் அவற்றைப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும் நாயன்மார்கள் தமிழகமெங்கும் பரப்பினர்.
- நாயன்மார்களின் சிவ வழிபாட்டைப் பின்பற்றியே, கர்நாடகாவில் **பசவர்** லிங்காயத் என்னும் புதிய சமயப் பிரிவைத் தோற்றுவித்தார். இடைக்காலத்தில் இவரது சீடர்கள் இந்தியா முழுவதும் சிவ வழிபாட்டைப் பரப்பினர். இந்த அடிப்படையில் சிவ வழிபாடு தமிழகத்திலிருந்தே வட இந்தியாவிற்குச் சென்றது.
- நாயன்மார்கள் சைவ சமயத்தை வளர்த்ததுடன் தமது பதிகங்களால் தமிழ்மொழியையும் வளர்த்தனர்.



XII Ethics_Lesson 6.indd 157 16-03-2020 15:01:19

தமிழிலக்கியத்தை இந்தியா முழுவதும் பரப்பினர்.

- நாயன்மார்கள் பல்வேறு சாதிப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள்; ஆனால், சாதி வேறுபாடின்றி இறைவனை வழிபட்டனர். இதனால் கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற சமூகக் கோட்பாடு வலுப்பெற இவர்கள் காரணமாயினர்.
- நாயன்மார்களின் சமூக நல்வாழ்வுப் பணிகள், ஆலயப் பணிகள் ஆகியவை மக்கள் மனத்தில் ஆன்மிக மற்றும் சமூகச் சேவை உணர்வை வளர்த்தது.
- பக்தி இயக்கத்தில் புதிய கோட்பாடுகளான ஞான மார்க்கக்கோட்பாடு, தொண்டு மார்க்கக்கோட்பாடு, நட்பு மார்க்கக்கோட்பாடு போன்றவை தோன்ற இவர்கள் காரணமாயினர்.
- தமிழகத்தின் பண்பாட்டைப் பாதுகாக்க இவர்கள் பல்வேறு விழாக்களைக் கொண்டாடினர். அயல்நாடுகளில் சைவ மரபு பரவ, மன்னர்கள் உதவினர். பிற்காலச் சோழர்கள் சைவ சமயத்தை இலங்கை உட்பட பல நாடுகளில் பரப்பினர். இதனால் தமிழர் பண்பாடும், சைவ மரபும் அயல்நாடுகளில் பரவியதன் மூலம் உலக ஆன்மிக நெறிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர்.

## ஆழ்வார்கள்

இறைவனின் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து கிடப்பவர்கள், இறைவனின் அன்பிலும் இன்பத்திலும் மூழ்கி இருப்பவர்களை ஆழ்வார் எனப்பட்டனர். திருமாலின் புகழையும், தத்துவத்தையும் வாழ்வியலோடு பொருத்தி, நாடு முழுவதும் பரப்பியவர்கள். வைணவ மரபுப்படி சிந்தையின் அடிப்படையில் திருமாலைப் பற்றிய ஆழ்ந்த தேடல்கள் கொண்டவர்கள். திராவிட வேதமென போற்றப்பட்ட நாலாயிரதிவ்யப்பிரபந்தத்தை அருளியதால் **திராவிடாச்சாரியார்கள்** என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் மொத்தம் பன்னிருவராவர்.

**ஆழ்வார்களின் காலம்** – ஆழ்வார்கள் அவதரித்த கால அடிப்படையில் 1) முற்காலத்தவர்கள் 2) இடைக்காலத்தவர்கள் 3) பிற்காலத்தவர்கள் என்று மூன்று நிலைகளில் பிரிக்கப்படுகின்றனர்.

### முற்காலத்தவர்கள்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர் முற்கால ஆழ்வார்கள் ஆவார்.

இடைக்காலத்தவர்கள் – நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் இடைக்காலத்தவராவர்.

### பிற்காலத்தவர்கள்

தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர் பிற்காலத்தவர்களாவர்.

### 1. பொய்கையாழ்வார்

காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்ற ஊரில் யதோத்தகாரி என்ற திருமால் கோயிலின் பொற்றாமரைக் குளத்தில் தோன்றினார். இதனால் பொய்கையார் என்றழைக்கப்பட்டார். திருமாலின் கையிலுள்ள பஞ்சசன்யம் என்ற திருச்சங்கின் அவதாரமாக அவதரித்தார். ஆழ்ந்த இறைநிலையைப் போதித்ததால் பொய்கையாழ்வார் எனப்பட்டார். இவர் திருமாலின் பத்து அவதாரங்களைப் பற்றிய பாசுரங்களை இயற்றினார். இவர் பாடிய பாசுரங்கள் நாலாயிரதிவ்யப்பிரபந்தத்தின்

**உங்களுக்குத் தெரியுமா?**

மங்களாசாசனம் என்பது வைணவத் திருத்தலங்களில் பக்திப்பாடல்களை இயற்றி அங்கேயே இறைவன் முன் அரங்கேற்றுவதாகும். தமிழகத்தில் மங்களாசாசனம் செய்தவர்களில் பொய்கையாழ்வாரே முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.



XII Ethics_Lesson 6.indd 158 16-03-2020 15:01:19

**முதல் திருவந்தாதி** எனப்படுகின்றது. இத்திருவந்தாதி நூறு பாடல்களைக் கொண்டது. இவர் பல வைணவத் திருத்தலங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இவர்தம் இயல்புகளையும்,பக்தியையும் முதல் திருவந்தாதியில் கூறுகிறார். இவர் தான் பிறர்பொருளை விரும்பமாட்டேன், குணத்தால் தீயவருடனும். கீழ்க்குணமுடையவருடனும் சேரமாட்டேன். தான் யாருக்கும் எந்தத் தீங்கும் இழைக்க மாட்டேன். திருமாலைத் தவிர வேறெந்த இறைவனையும் வழிபடமாட்டேன் என்று கூறுகிறார். உயர்ந்த வைணவ சமயத்தின் தத்துவக் கருவூலங்களாகப் பொய்கையாழ்வாரின் பாடல்கள் திகழ்கின்றன. பன்னிரு ஆழ்வார்களில் இவரே முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.

## 2. பூதத்தாழ்வார்

மாமல்லபுரத்தில் குருக்கத்தி மலரில் தோன்றினார். இவர் அங்குள்ள ஸ்தல சயனப் பெருமாளைப் புகழ்ந்து பாடிய பிறகு காஞ்சிபுரம் சென்று அங்குள்ள திருமாலைப் புகழ்ந்து பாடினார். தமிழை இவர் **ஞானத்தமிழ்** என்று புகழ்ந்து பாடுகிறார். இவர் பாடிய நூறு பாசுரங்கள் நாலாயிரதிவ்யப்பிரபந்தத்தில் இரண்டாவது திருவந்தாதியாகப் போற்றப்படுகின்றன. திருமால் மீதான பக்தியும், தமிழ் மீதான பக்தியும் இவரது இரண்டு கண்களாகத் திகழ்ந்தன. இவர் திருமாலின் கையிலுள்ள கௌமோதகி என்ற கதையின் (ஆயுதம்) அம்சமாகக் கருதப்படுகிறார். அன்பு, சிந்தனை இவற்றால் இவர் ஞானத்தைப் பெற்ற நிலையைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

*"அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,*

*இன்புருகுஞ் சிந்தை இடுதிரியா – நன்புருகி*

*ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு*

*ஞானத் தமிழ் புரிந்த நான்" (நா. தி.பி: 2182)*

என விளக்குகிறார். அறிவைப் பெருக்கும் தமிழை விரும்பிய நான் அன்பையே அகலாக எண்ணெய், திரி முதலியவற்றைத் தாங்கும் கருவியாக அமைத்து அறிவாகிய சுடர்விளக்கை ஏற்றினேன். ஆசையை நெய்யாக்கிக் கொண்டேன். எம்பெருமானை எண்ணி, இன்பத்தால் உருகுகின்ற உள்ளத்தையே எண்ணெய்யில் இட்ட திரியாக்கிக் கொண்டேன். நன்றாக மனமுருகி ஞான ஒளியாகிய விளக்கைத் திருமாலுக்காக ஏற்றினேன் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

## 3. பேயாழ்வார்

இவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் பிறந்தவர். திருமாலின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான **நாந்தகம்** என்ற வாளின் அம்சமாகக் கருதப்படுகிறார். இவர் பாடிய பாசுரங்கள் **மூன்றாம் திருவந்தாதி** ஆகும். திருமாலின் மீது மிகுந்த பக்தி கொண்டு மனம் சோர்ந்து, கண் சுழன்று, அழுது, சிரித்து, ஆடிப்பாடி பேய்பிடித்தார் போல, இறைவனைத் தொழுது மகிழ்ந்ததால் பேயாழ்வார் என்றழைக்கப்படுகிறார்.இவருடையபாசுரங்கள் மூலம், எல்லாவற்றிற்கும் சரியானது எது என்ற தீர்வு துளசிமாலையணிந்த திருமாலிடமே உள்ளது என்றார்.

## 4. திருமழிசையாழ்வார்

இவர் தொண்டை நாட்டில் திருமழிசை என்ற ஊரில் பிறந்தவர். திருமாலின் **சுதர்சன சக்கரத்தின்** அம்சமாகக் கருதப்படுகிறார். பேயாழ்வாரிடம் உபதேசம் பெற்ற இவர் வளர்ப்புப் பெற்றோருக்குப் பிறந்த **கணிக்கண்ணன்** என்பவரை தம் சீடராகக் கொண்டு காஞ்சிபுரம் சென்று, அதனருகிலுள்ள திருவெஃகா என்ற இடத்திலுள்ள திருமாலைத் தரிசித்தார். அதன் பிறகு கும்பகோணம் சென்று அங்குள்ள திருமாலையும் தரிசித்தார். இவர் **பக்திசாரர்,திருமழிசைபிரான்,குடமுக்கிற்புலவர்** என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். இவர் அருளிய நூல்கள் 1) **நான்முகன் திருவந்தாதி** 2) **திருச்சந்த விருத்தம்** ஆகியவை ஆகும்.

## 5. நம்மாழ்வார்

இவர் பாண்டிய நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரி என்ற ஊரில் பிறந்தவர். இவர் நான்கு வேதங்களைத் தமிழில் பாடியதால்



XII Ethics_Lesson 6.indd 159 16-03-2020 15:01:19

**தமிழ் செய்த மாறன்** எனப்படுகிறார். திருவிருத்தம், **திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி** ஆகிய நூல்களை இயற்றினார். இந்நூல்கள் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களுக்கு இணையானவை என்று வைணவ சமய அறிஞர்களால் கருதப்படுகின்றன. இவரின் இயற்பெயர் **சடகோபன்**, **குடிபெயர்மாறன்** ஆகியனவாகும். சிறப்புப்பெயர்கள் **குருகூர்நம்பி,வகுளாபரணன், பராங்குசன், காரிமாறன், வழுதிவளநாடன்** என்பவனாகும்.

### 6. மதுரகவியாழ்வார்

இவர் பாண்டிய நாட்டின் திருக்கோளூர் என்னும் ஊரில் பிறந்தார். இளம் வயதிலேயே கவிதைபாடும் திறமை பெற்றவராதலால் **மதுரகவி** எனப் புகழ்ப் பெற்றார். யோக நிலையில் இருந்த நம்மாழ்வாரைக் கண்ட மதுரகவி **"இவர் எல்லாமறிந்த ஞானி"** என்பதை உணர்ந்தார். பின்னர் அவரையே குருவாக ஏற்றுக்கொண்டார். இறைவனைப் பாடாமல் தம் குருவாகிய நம்மாழ்வாரையே இறைவனாகக் கொண்டு **'கண்ணிநுண் சிறுதாம்பு'** என்ற பாசுரத்தைப் பாடியுள்ளார்.

### 7. குலசேகர ஆழ்வார்

இவர் சேரநாட்டில் 'திருவஞ்சைக்களம்' என்னும் இடத்தில் அரச குலத்தில் பிறந்தவர். அரச பதவியைவிடப் பக்தியும் இறைத்தொண்டுமே சிறந்தன என்னும் நோக்கில் வைணவ அடியார் ஆனார்.

*'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ*

*வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்*

*தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்*

*மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே'*

என்று நாடாளும் மன்னனாக இருப்பதைவிடத் திருவேங்கடச்சுனையில் மீனாக இருத்தலே மேல் என்று திருவேங்கடப் பெருமாள் மீதுள்ள தமது ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறார். இவர் இறைவனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியுள்ளார். "அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்துன் பவளவாய்க் காண்பேனே" எனக் குலசேகரர் பாடியதால் இன்றும் திருமால் கோயில்களில் உள்ள கருவறையின் படி, **"குலசேகரப்படி"** எனக் கூறப்படுகின்றது. இவர் இயற்றிய பாசுரங்கள் **பெருமாள் திருமொழி** ஆகும்.

### 8. பெரியாழ்வார்

பெரியாழ்வார் திருவில்லிபுத்தூரில் பிறந்தவர். இவருக்கு **விஷ்ணுசித்தன், பட்டர்பிரான்** ஆகிய பெயர்களுமுண்டு. இவர் பெருமாளைத் தமது குழந்தையாகக் கருதிப் பாசுரங்கள் பாடினார். இப்பாசுரங்களின் அமைப்பைப் பின்பற்றியே பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றின எனத் தமிழ் அறிஞர்கள் கூறுவர்.

*"கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்*

*எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்*

*ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்*

*மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய் "*

எனத் திருமாலின் குழந்தைச் செயல்பாட்டைத் தாயின் நிலையிலிருந்து எண்ணிப் பாடுகிறார். **திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி** ஆகிய பாசுரங்களைப் பாடியுள்ளார்.

> நம்மாழ்வார் – நம் ஆழ்வார்: "நம்மாழ்வார் ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ மட்டும் உரியவர் அல்லர். அவர் எல்லா நாட்டிற்கும், எல்லா சமயத்தார்க்கும், எல்லா இனத்தார்க்கும் உரியவர்; எல்லாரும் 'நம்மாழ்வார்' என்று போற்றும் ஒரு பெரியாரை அளித்த தமிழ்நாட்டை மனத்தால் நினைக்கிறேன்; வாயால் வாழ்த்துகிறேன்; கையால் தொழுகிறேன்"
>
> – திரு.வி.க

## 9. ஆண்டாள்

பெரியாழ்வார் தமது நந்தவனத்தில் துளசிச் செடியின் அருகில் கண்டெடுத்து வளர்த்த பெண் குழந்தையே ஆண்டாள் என்பர். இவருக்குப் பெரியாழ்வார் சூட்டிய பெயர் **கோதை நாச்சியார்.** கோதை, பெருமாளுக்குத் தொடுக்கப்பட்ட மலர் மாலைகளைத் தாம்சூடி அழகுபார்த்தபின், பெருமாளுக்கு அளித்ததால் **சூடிக்கொடுத்த சுடர்க்கொடி** என அழைக்கப்பட்டார்.

திருமால்மீது கொண்ட அன்பையும் காதலையும் இவர் படைப்புகளில் காணமுடிகிறது. இவர் **திருப்பாவை, நாச்சியார் திருமொழி** முதலிய பாசுரங்களைப் படைத்துள்ளார். பண்டைய தமிழகத்தில் திருமணமாகாத பெண்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு மேற்கொள்வர். இதனை அடிப்படையாகக் கொண்டு திருப்பாவையை ஆண்டாள் இயற்றினார். மார்கழி மாதத்தில் இப்பாசுரங்கள் வைணவத் திருத்தலங்களில் இன்றும் பாடப்படுகின்றன. இவரது பாடல்கள் நாயக – நாயகி பாவத்தை உணர்த்துகின்றன.

*'ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்*

*ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி*

*ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கருத்து*

*பாழியந் தோளுடை பத்மநாபன் கையில்*

*ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து*

*தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்*

*வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்*

*மார்கழி நீராட மகிழ்தேலோர் எம்பாவாய்'.*

என மழை, கருக்கொண்டு பொழிவதைத் தமது பாசுரங்களில் காட்சிப் படுத்தியுள்ளார்.

## 10. தொண்டரடிப் பொடியாழ்வார்

இவர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். **'விப்ரநாராயணர்'** என்பது இவருடைய இயற்பெயராகும். திருவரங்கம் சென்று நந்தவனம் அமைத்து அரங்கநாதப் பெருமாளுக்குத் தொண்டு புரிந்து வந்தார். இதனால் 'தொண்டரடிப்பொடி' என்று பெயர் பெற்றார். திருமலைப் பாசுரத்தில் பல நீதிக் கருத்துகளைக் கூறுகிறார்.

*ஊரிலேன் காணி இல்லை உறவு மற்றொருவர் இல்லை*

*பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி*

*காரொளி வண்ணனே! என் கண்ணனே! கதறுகின்றேன்*

*ஆருளர் களைகண் அம்மா! அரங்கமா நகர் உளானே!*

இதில் தமக்குக் கடவுளைத் தவிர, வேறு துணையில்லை என்று குறிப்பிடுகிறார். இவர் இயற்றிய பாசுரங்கள் **திருமாலை, திருப்பள்ளியெழுச்சி** என அழைக்கப்படுகின்றன. "திருமலை அறியாதார் திருமாலை அறியாதாரே" என்ற முதுமொழி இப்பிரபந்தத்தின் பெருமைக்குச் சான்றாகும்.

## 11. திருப்பாணாழ்வார்

இவர் 'திருச்சியை அடுத்துள்ள உறையூரில் பிறந்தவர். இவர் இயற்றியது **அமலனாதிபிரான் பாசுரங்கள்** ஆகும். இப்பாசுரங்கள் திருவரங்கத்து அரங்கனின் அழகை விவரிக்கிறது.

*"கொண்டல் வண்ணனைக் கோவல*
*னாய்வெண்ணெய்*

*உண்ட வாயன்என் னுள்ளம் கவர்ந்தானை*

*அண்டர் கோன் அணியரங்கன் என்அமுதினைக்*

*கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"*

## 12. திருமங்கையாழ்வார்

இவர் சோழ நாட்டில் திருவாலி திருநகரியில் பிறந்தவர். சோழ மன்னனிடம் படைத்தளபதியாக இருந்து பல போர்களில் வெற்றி பெற்று (பரகாலன்) எதிரிகளுக்கு எமன் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இவரைச் சிறப்பிக்க விரும்பிய மன்னன் திருமங்கை நாட்டிற்கு மன்னராக்கி **'திருமங்கை மன்னன்'** என்னும் பெயரைச் சூட்டினான். இவர் இயற்றியவை **பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல்,** பெரிய திருமடல் ஆகியனவாகும்.



XII Ethics_Lesson 6.indd 161 16-03-2020 15:01:19

## தமிழகப் பண்பாட்டிற்கு ஆழ்வார்களின் கொடை

- ஆழ்வார்கள் தாங்கள் இயற்றிய பாசுரங்கள் மூலம் வைணவ பக்தி இயக்கத்தை, மக்களிடையே பரப்பினர். வாழ்வியலில் பக்திநெறியை இணைப்பதிலும் முக்கிய பங்காற்றினர்.
- தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பங்களிப்பு போற்றத்தக்கது.
- வைணவ சமயத்தைத் தமிழ்மயமாக்கியதில் ஆழ்வார்களின் பங்கு மகத்தானது.
- ஆழ்வார்களின் ஆன்மிகக் கோட்பாடுகள், தத்துவங்கள் தமிழகத்தில் சங்ககாலத் திருமால் வழிபாட்டு முறையைச் சில மாற்றங்களுடன் பரப்பி, வைணவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர்.
- தமிழகத்தில் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்த ஆன்மிகம், இடைக்காலத்தில் வளர ஆழ்வார்களே வித்திட்டனர்.
- ஆழ்வார்களால் அக இலக்கியங்களுக்குப் புதிய வடிவம் தரப்பட்டது. அதன்படியே கடவுளையே கணவனாக, மகனாக நண்பனாக நினைக்கும் மனநிலை வளர்ந்தது.
- இறைவனிடம் சரணாகதி அடையும் தத்துவத்தைப் போதித்தவர்கள் ஆழ்வார்களேயாவர்.
- தமது பாசுரங்கள் மூலம் பக்திநெறியுடன் இசைக்கலை, நாடகக்கலை, நடனக்கலை வளர்ச்சியடைய ஆழ்வார்கள் உதவினர்.
- வேதங்கள், உபநிடதங்கள்,புராணங்கள், காப்பியங்கள் உள்ளிட்ட பலவற்றை மக்களின் மொழியான தமிழிலேயே ஆழ்வார்கள் விளக்கிக் கூறினர்.
- ஆழ்வார்களின் வழிபாட்டுமுறை, சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது.
- உலக இன்பங்கள் நிலையற்றவை; பிறப்பு, இறப்பு எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. பொருளாசை தேவையற்றது; எனவே, மறுபிறவியற்ற நிலை வேண்டும் அதற்குத் திருமாலின் அருள் தேவை என்று ஆழ்வார்கள் எடுத்துக்கூறி மக்களை நல்வழிப்படுத்தினர்.
- **ஆலயப்பணியே சமூகப்பணிக்கு அடிப்படை** என்ற உயரிய தத்துவத்தை ஆழ்வார்களே ஏற்படுத்தினர்.
- ஆழ்வார்களின் சமய, சமூகப்பணியே பிற்காலத்தில், இராமானுஜர் வழியாகப் பக்தி இயக்கம் வடஇந்தியாவில் பரவ வழிவகுத்தது எனலாம். அந்த அடிப்படையில் ஆன்மிகம், மற்றும் சமூக அரும்பணிகள் தமிழகத்தில் தோன்றி, அதன் பிறகே வடஇந்தியாவிற்குச் சென்று, பக்தி இயக்கமாக உச்சநிலையடைந்தன.
- ஆழ்வார்கள் உருவ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். இது பாமர மக்களை நல்வழிப்படுத்த உதவியது.

## இடைக்கால இந்தியாவில் பக்தி இயக்கம்

### ஆச்சாரியர்கள்



திருவரங்கம் அரங்கநாதர் கோயில்

வைணவ ஆச்சாரியர்கள் என்போர், கடவுள்மீது கொண்ட அன்பின் உணர்வுகளை அறவழியில் விளக்கியவர்கள் ஆவர். வைணவ பக்தி தழைக்க ஆழ்வார்கள் காரணம் எனில், வைணவ நடைமுறையும் தத்துவமும் தோன்ற ஆச்சாரியர்களே காரணமாக இருந்தனர். ஆச்சாரியர்கள் வடமொழி, தமிழ்மொழி ஆகிய

இருமொழிப் புலமையும் பெற்றிருந்தனர். ஆழ்வார்களின் பாசுரங்களில் பொதிந்துள்ள வைணவத் தத்துவக் கருத்துகளை விளக்கி, வேதத்தோடு ஒப்பீடு செய்து உரை எழுதியுள்ளனர்.

### மணிப்பிரவாளநடை

மணி என்பது முத்துமணி. பிரவாளம் என்பது பவளமணி. வெண்ணிற முத்துமணியையும், சிவந்த பவளமணியையும் சேர்த்து கோர்த்தார் போல் அமைந்தது மணிப்பிரவாளம். அதுபோல தமிழ்ச்சொற்களும் வடமொழிச் சொற்களும் கலந்து எழுதப்பட்ட உரைநடையே மணிப்பிரவாள நடை எனப்பட்டது.

இவ்விளக்க உரைகளின் விளைவால் வடமொழியும், தமிழ்மொழியும் கலந்த **மணிப்பிரவாளநடை** புதிதாகத் தோன்றியது. வைணவம் தழைக்கப் பாடுபட்டவர்களுள் **நாதமுனிகள், ஆளவந்தார், வேதாந்த தேசிகர், பிள்ளை லோகாச்சாரியார், இராமானுஜர்** ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். ஆழ்வார்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்துசெய்தபெருமைஆச்சாரியர்களையே சாரும்.

## நாதமுனிகள்

இவர் காட்டுமன்னார்கோயிலில் பிறந்தவர். தமது ஊர்க்கோயிலில் இருவர் திருவாய்மொழிப் பாசுரங்கள் பாடியதைக் கேட்டார். அப்பாடல்கள்மீது கொண்ட ஈர்ப்பால் நம்மாழ்வரிடம் இருந்து பிரபந்தங்களைப் பெற்றார். இவர், ஆழ்வார்களின் பிரபந்தங்களுக்கு இசை அமைத்து அளித்தவர் ஆவார். இவரே நாலாயிரதிவ்யப்பிரபந்த பாசுரங்களைத் தொகுத்தவர் ஆவார்.

நாதமுனிகள் பக்தி யோகத்தைத் தம் மாணாக்கர்களுக்குக் கற்பித்தார். வைணவத்தையும் பிரபந்தத்தையும் பரப்பும்படி மாணவர்களிடம் கூறினார். **நியாயத்தத்துவம், யோக இரகசியம்** ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும்.

## இராமானுஜர்


இராமானுஜர்

இராமானுஜர் திருப்பெரும்புதூரில் பிறந்தவர். இவர் ஆளவந்தாரின் மாணவர். பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதினார். திருக்குருகைபிரான் பிள்ளையைக் கொண்டு திருவாய் மொழிக்கு 'ஆறாயிரப்படி' உரை எழுதினார்.

இவர் யமுனாச்சாரியார் மற்றும் திருக்கோட்டியூர் நம்பிகளிடமிருந்து மறை பொருளாகிய திருவெட்டெழுத்தைக் கற்றார். இதனை அனைவரும் அறியும்படி கோபுரத்தின் மீதேறி நின்று உரக்க மொழிந்தார். இவர் **விசிஷ்டாத்வைதத்** தத்துவத்தை தோற்றுவித்தவர். இந்தியத் தத்துவங்களில் விசிஷ்டாத்வைதம் மட்டுமே தத்துவத்துடன் பக்தியையும் இணைத்துள்ளது. இவர் எழுதிய நூல்கள் வேதாந்தசாரம், வேதாந்ததீபம், **வேதாந்த சங்கிரகம், ஸ்ரீபாடியம் (ஸ்ரீபாஷ்யம்), கீதாபாடியம் (கீதாபாஷ்யம்), கத்யதிரயம் சரணாகதி கத்தியம், திருவரங்க கத்தியம், வைகுண்ட கத்தியம்** என்பனவாகும். இராமானுஜரின் காலத்திற்குப் பின் வைணவம் **வடகலை, தென்கலை** என இரு பிரிவுகளாகப் பிரிந்தது.

### ஆலய நுழைவு போராட்டத்தின் முன்னோடி

ஆலயவழிபாட்டில் அனைத்து மக்களையும் பங்கேற்கச் செய்ய, இராமானுஜர் முதன் முதலில் ஆலய நுழைவுப் போராட்டத்தை நடத்தினார். இவர் தென்னிந்திய சமூக மற்றும் சமயச்சீர்திருத்தத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார்.




XII Ethics_Lesson 6.indd 163 16-03-2020 15:01:20

'ஆன்மாவே பரம்பொருளின் சாரம்' என்று கூறிய இராமானுஜர், அறிவாகவுள்ள ஆன்மா மாற்றமடைவதில்லை என்றார். இறைவனையே தஞ்சமடைந்து அவனை முற்றிலும் சரணடைதலே விசிஷ்டாத்வைதம்(பிரபத்தி மார்க்கம்) என்று இராமானுஜர் கூறினார். இராமானுஜர் திருச்சியின் ஒருபகுதியான திருவரங்கத்தில் அரங்கநாத சுவாமி கோயிலில் இறுதிவரை இறைப்பணி செய்தார்.

## நிம்பார்க்கர்

இராமானுஜருக்குப் பிறகு புகழ்பெற்ற பக்தி இயக்க ஞானி நிம்பார்க்கர். இவர் வடஇந்தியாவில் தன் பக்திக் கருத்துகளைப் பரப்பினார். மகாவிஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ணர், இராதை ஆகியோரே பரம்பொருள் என்றார். இராதாகிருஷ்ணரை அடைய ஆழ்ந்த பக்தி அவசியம் என்றார். உத்திரப்பிரதேசத்தில் இவருடைய இராதாகிருஷ்ண வழிபாட்டைப் பலர் பின்பற்றினர். இவருடைய கொள்கை **பேதாபேதம்** என்று அழைக்கப்படுகிறது.

## மத்துவர்


மத்துவர்

இவர் கர்நாடகத்தில் உடுப்பி மாவட்டத்தில் கல்யாண்பூர் என்ற இடத்தில் பிறந்தவர். இவர் மஹாவிஷ்ணு, லட்சுமி அவதாரத்தைத் தம் பக்திக் கோட்பாட்டின் ஆதாரமாகக் கொண்டவர். இவர் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று தம்முடைய பக்திக் கோட்பாட்டைப் பரப்பியவர். இவர் அறிமுகப்படுத்திய பக்திக் கோட்பாடு துவைதம் எனப்படுகிறது. **துவைதம் என்ற சொல்லிற்கு இருமைக் கொள்கை** என்று பொருள். (பரம்பொருள் ஒன்றே; அவரை அடைய மக்களின் முயற்சிகள் பல்வேறானவை). ஆதிசங்கரரின் அத்வைதம், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம் ஆகியவற்றிலிருந்து இக்கோட்பாடு மாறுபட்டது. மத்துவரால் எழுதப்பட்ட துவைத வேதாந்த நூல்கள் **"சர்வமூலம்"** என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன. ஹரி என்ற கடவுளின் உண்மைத்தன்மையை அறிய முயற்சிப்பது ஒவ்வொருவரின் கடமை என்றார். தன் பக்திக் கோட்பாடுகளை மையமாக வைத்து மத்துவர் 37 நூல்களை எழுதியுள்ளார்.


## ஜெயதீர்த்தர்

மத்துவருக்குப் பின் அவருடைய சிந்தனைகளைப் பரப்பிய அவரது சீடராவார். இவர் வேதாந்த சூத்திரங்களுக்குப் "பாஷ்யம்" என்ற விளக்கவுரையை எழுதினார். **ஜெயதீர்த்தர் திகாச்சாரியா** என்றும் அழைக்கப்பட்டார். அத்வைதத்தை உருவாக்கிய ஆதிசங்கரருக்கு **வசஸ்பதி மிஸ்ரா** (அத்வைதப் பரப்பாளர்) எவ்வாறு முக்கியமோ அதேபோல் மத்துவருக்கு ஜெயதீர்த்தர் முக்கியமானவர் என்று பக்தி இயக்கத்தவர்கள் கூறுகின்றனர். ஆன்மிகம் தொடர்பான ஆழ்ந்த அறிவு அவரிடம் இருந்தது. **வதவாலி** என்ற நூலை எழுதிய இவர் மத்துவரின் 18 நூல்களுக்கும் விளக்கவுரை எழுதியுள்ளார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஜெயதீர்த்தரின் நியாயசுதா என்ற நூலிற்கு புவனகிரியில் பிறந்த இராகவேந்திரர் விளக்கவுரை எழுதினார்.

## இராமானந்தர்


இராமானந்தர்

தென்னிந்தியாவையும் வடஇந்தியாவையும் தமது பக்திநெறியின் மூலம் இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர். அலகாபாத் என்ற இடத்தில் பிறந்த இவர் இராமானுஜரின் விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டை நன்கு கற்று அவரையே தமது குருவாகக் கொண்டவர். இராமர், சீதை வழிபாட்டையும், தமது கொள்கையையும் இந்தி மொழியில் பரப்பினார். இவர் சாதி முறையையும் குலப் பிரிவுகளின்



XII Ethics_Lesson 6.indd 164 16-03-2020 15:01:20

வேறுபாடுகளையும் வெறுத்தார். அன்பான உள்ளமே இறைவனின் இருப்பிடம் என்றும், கடவுளுக்கு முன் ஆண், பெண், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என வேறுபாடு கிடையாது என்றும் கூறினார். அன்பான உள்ளம் கொண்ட எவரிடத்திலும் இறைவன் இருக்கிறார் என்று கூறிய இவர் பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த பன்னிருவரைச் சீடராக்கிக் கொண்டார்.

**இராமானந்தரின் சீடர்கள்**

1. கபீர் – முஸ்லீம் நெசவாளி 2. ராய்தாசர் – செருப்பு தைக்கும் தொழிலாளி 3. சேனா – முடிதிருத்தும் தொழிலாளி 4. சாதனா – மாமிசம் வெட்டுபவர் 5. தன்னா – ஜாட் இனக் குடியானவர் 6. நரஹரி – பொற்கொல்லர் 7. ஃபிபர் – இரஜபுத்திர இளவரசர் 8. ஆனந்தனந்தர் 9. சுர் சுரானந்தர் 10. சூர் ஆனந்த் 11. சர்கரி 12. பத்யாவதி

## வித்யாபதி

இவர் தம் பக்திப் பாடல்கள் மூலமும் கவிதைகள் மூலமும் வங்காளப் பகுதிகளில் சிவ வழிபாட்டைப் பரப்பியவர். புருஷபக்சா என்ற நீதிபோதனைக் கதைகளை எழுதிய இவர், மைதிலி மொழியில் கோரக்ச விஜயா என்ற நாடக நூலையும் எழுதினார்.

## ஞானேஷ்வர்

இவர் மகாராஷ்டிராவில் பக்தி இயக்கத்தைப் பரப்பியவர். இவரது பக்திக் கோட்பாடுகள் '**மகாராஷ்டிர தர்மம்**' எனப்பட்டது. பகவத் கீதையின் விளக்கவுரையாக "**ஞானேஷ்வரி**" என்ற நூலை எழுதினார். அத்வைத சித்தாந்தத்தை விளக்கும் 'அம்ருதானுபவ' என்ற நூலையும் எழுதிய இவர் மகாராஷ்டிரம் முழுவதும் சென்று தமது பக்திக் கோட்பாடுகளைப் பரப்பினார்.

## பசவர்

கர்நாடகாவில் தோன்றிய பசவர், சாளுக்கிய மன்னனிடம் அமைச்சராகப் பணியாற்றினார். 'சிவபெருமானே முழுமுதற் கடவுள்' என்பதை இவரது பக்திநெறி வலியுறுத்தியது. சாதிப் பாகுபாடுகள், சமயச் சடங்குகள், உருவ வழிபாடு ஆகியவற்றைக் களையப் பாடுபட்டார். இதுவே மோட்சம் அடையும் வழி என்று கூறினார்.இவரது சமயத்தைப் பின்பற்றுபவர்கள் புலால் உண்ணுதல், மது அருந்துதல் போன்றவற்றைப் புறக்கணிக்க வேண்டுமென்றும் அப்பழக்கங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கடுமையாக நிபந்தனை விதித்தார். குழந்தைத் திருமணத்தை எதிர்த்த இவர் விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். இவரைப் பின்பற்றுபவர்கள் **வீரசைவர்கள் (லிங்காயத்துகள்)** என்றழைக்கப்படுகின்றனர். நதியின் சங்கமத்தலைவன் என்று சிவபெருமானைப் பசவர் போற்றுகிறார். அனைத்து பிரிவினரும் இவரது சமயப் பிரிவில் இணைந்தனர். தமது போதனைகளைக் கன்னட மொழியில் பரப்பினார்.

## நாமதேவர்

மகாராஷ்டிராவின் பண்டரிபுரத்தில் பிறந்த நாமதேவர் "**விதோபா**" என்ற பக்திக் கோட்பாட்டைப் பின்பற்றினார். பல்வேறு இனத்தவர்களைத் தமது சீடராக்கிக் கொண்டார். இவரது கருத்துகள் '**மகாராஷ்டிரதங்கம்**' எனப்பட்டது. சாதியை, உருவ வழிபாட்டை, பொருளற்ற சடங்குகளை வன்மையாக எதிர்த்தார். உண்மையான பக்தியும், கடவுள் வழிபாடும் இவரது முக்கிய கொள்கையாகும்.

## கபீர்



கபீர்

இராமானந்தரின் புகழ்பெற்ற சீடர்களில் ஒருவர். தொடக்கம் முதலே இந்து முஸ்லீம் ஒற்றுமையை வளர்த்தவர். கடவுள் ஒருவரே என்று போதித்த இவர்



XII Ethics_Lesson 6.indd 165 16-03-2020 15:01:20

**'இராமனும் இரஹீமும் ஒன்றே, கிருஷ்ணரும் கரீமும் ஒன்றே', அல்லாவும் ஈஸ்வரனும் ஒன்றே** என்று மக்களுக்குப் போதித்தார். இந்துவும் முஸ்லீமும் ஒரே களிமண்ணால் செய்யப்பட்ட இருவேறு பானைகள் போன்றவர்கள் என்றார். மனத்தூய்மையில்லாமல் கங்கையில் நீராடுவதாலோ, கல்லாலான உருவங்களை வணங்குவதாலோ, நோன்பிருந்து மெக்கா செல்வதாலோ எந்தப் பயனுமில்லை என்று கபீர் போதித்தார். இவருடைய போதனைகளில் உயர்ந்தது, இந்து – முஸ்லீம் மெய்யுணர்வுக் கோட்பாடுகளும், உயர்ந்த மரபுத் தத்துவங்களும் ஆகும். இவர் சமயச் சடங்குகளையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்தார். அன்புநெறியைப் பின்பற்றி, இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்கு வித்திட்டார். கபீருடைய பாடல் தொகுப்பு **தோஹாக்கள்** எனப்படுகிறது.

## குருநானக்

பஞ்சாபில் உள்ள லாகூர் மாவட்டத்தில் தால்வண்டி என்ற இடத்தில் கி. பி. (பொ. ஆ) 1469 –ஆம் ஆண்டில் பிறந்த குருநானக் இளம்வயதிலேயே சமயநெறியில் நாட்டம் கொண்டார். கபீரைத் தமது குருவாக ஏற்றுக்கொண்ட இவர், **கடவுள் ஒருவரே** என்று கூறினார். டெல்லி சுல்தானியர் காலத்திலிருந்த இந்து – முஸ்லீம் சமய வெறுப்பைத் தணிக்கும் பொருட்டுதம் பக்திக் கொள்கையை வகுத்துக் கொண்டார். அதனடிப்படையில், பிற்காலத்தில் அவர் சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தார். இந்துப் புராணங்களையும் இஸ்லாமியர்களின் புனிதநூலான குரானில் உள்ள கருத்துகளையும் படித்த இவருக்கு, இந்து – முஸ்லீம் வேற்றுமை பயனற்றது எனத் தோன்றியது. உருவமற்ற ஒரே கடவுளை வணங்குமாறும் தேவையற்ற சமயச் சடங்குகளைத் தவிர்க்குமாறும் குருநானக் போதித்தார். **லங்கர்** என்ற உணவுக் கூடத்தை நிறுவி, சமபந்தி உணவருந்தும் முறையைத் தொடங்கி வைத்தார்.

அறம் நிறைந்த வாழ்வைப் பின்பற்றுமாறும், பிற கோட்பாடுகளின் மீது சகிப்புத்தன்மை காட்டுமாறும் தமது போதனையில் கூறினார். எல்லாரையும் சமமாகக் கருதுபவரே உண்மையான பக்தர் என்று கூறிய குருநானக், ஞானிகளின் கல்லறைகளுக்குச் செல்வதாலோ, கடுந்தவம் செய்வதாலோ மட்டுமே இறையருள் பெறமுடியாது. அறத்தூய்மையற்ற இவ்வுலகில் மனத்தூய்மையுடன் வாழ்பவரே இறையருள் பெறமுடியும் என்று கூறினார். இவருடைய போதனைகள் அடங்கிய தொகுப்பு ஆதிகிரந்தம் ஆகும். இதுவே சீக்கிய சமயத்தின் புனித நூலாகும். சீக்கிய சமயத்தின் முதல் குருவான இவரைப் பின்பற்றி, ஒன்பது சீக்கிய சமயகுருமார்கள் இவரது போதனைகளை உலகறியச் செய்தனர்.

## வல்லபாச்சாரியார்

இவர் காசியில் பிறந்து தென்னிந்தியாவிற்கு பெற்றோருடன் குடிபெயர்ந்தார். விஜயநகரப் பேரரசின் தலைசிறந்த மன்னரான கிருஷ்ணதேவராயரின் அவைக்குச் சென்று, கிருஷ்ண வழிபாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தார். அதன்பின் வாரணாசிக்குச் சென்று, பல ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து, கிருஷ்ணர் வழிபாட்டைப் பரப்பினார். மக்களிடையே நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றப் பாடுபட்டார். முக்தியடைய கிருஷ்ணர் வழிபாட்டோடு கூடிய உலகியல் வாழ்வு அவசியம் என்றார். '**புஷ்டிமார்க்கம்**' என்ற ஆன்மிகக் கோட்பாட்டை உருவாக்கினார். இவருடைய பக்தி மார்க்கம் **சுத்த அத்வைதம்** எனப்படுகிறது. இவர் வடமொழியிலும், **ப்ரிஜ்** (Parji) மொழியிலும் நூல்களை எழுதினார்.

இவர் உருவாக்கிய கிருஷ்ண பக்திப் பாடல்கள் இன்றும் இராஜஸ்தான், குஜராத் பகுதிகளில் பாடப்படுகின்றன. உணர்ச்சி மிகுந்த ஆழ்ந்த இறை பக்தியை இவரது பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. **சுபோதினி, சித்தாந்த ரகசியா** ஆகிய நூல்களையும் இவர் எழுதினார்.

## சைதன்யர்

வங்காளத்தில் பிறந்த இவர் தம் 25–ஆம் வயதிலேயே துறவியானவர். இவர் **ஸ்ரீசைதன்ய மகாபிரபு** என்றும் அழைக்கப்பட்டார். சிறந்த



XII Ethics_Lesson 6.indd 166 16-03-2020 15:01:21

மொழியறிவையும், இலக்கிய அறிவையும் பெற்றவர். கிருஷ்ணர் மீதான பக்தியே முக்திக்கு வழி என்று போதித்தவர். அன்பு, பக்தி ஆகிய நெறிகளின் மூலமே பரம்பொருளான கிருஷ்ணரை அடைய முடியும் என்றார். சமூகத்தில் நிலவிய சாதி, சமய வேறுபாடுகளை எதிர்த்த இவர் மனிதரில் ஏற்றத்தாழ்வு கிடையாது. கிருஷ்ணரின் முன் அனைவரும் சமம் என்று கூறினார். கிருஷ்ண பக்தி தொடர்பான இவரது தத்துவம் '**அசிந்திய பேதா பேதம்**' எனப்படுகிறது.

## துளசிதாசர்

கோஸ்வாமி துளசிதாஸ் என்றழைக்கப்பட்ட இவர் வைணவ சமயத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். வட இந்தியாவில் இராமவழிபாட்டு, முறையைப் பரப்பியதுடன் இராமாயணத்தை ராமசரித மானஸ் என்ற பெயரில் இந்தி மொழியில் மொழியாக்கம் செய்தார். இவர், வினயபத்திரிக்கா,கீதாவளி,தோகாவளி,பார்வதி மங்கள், ஜானகி மங்கள் ஆகிய நூல்களை இயற்றினார். இவருடைய படைப்புகளில் மகன் தம் பெற்றோர்க்கு ஆற்ற வேண்டிய கடமை, ஒரு மாணவன் தம் குருவிற்கு புரிய வேண்டிய கடமை ஒரு அரசன் தம் குடிமக்களுக்கு புரிய வேண்டிய கடமை போன்றவை முக்கியத்துவம் பெற்றுள்ளன.

## சூர்தாசர்

கிருஷ்ணர், ராதை வழிபாட்டில் ஈடுபட்டுப் பக்தி இயக்கத்தைப் பரப்பியவர். கிருஷ்ணரை வழிபடுவதே முக்திக்கு வழி என்று கருதினார். இவர் "**ஆக்ராவின் பார்வையற்ற கவிஞர்**" எனப்பட்டார். **சூர் சாகர், சாகித்ய ரத்னா** போன்ற நூல்களையும் எழுதினார். இவர் பாடிய கிருஷ்ண பக்திப் பாடல்கள் வட இந்தியாவின் பக்தி மார்க்கத்தில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. முகலாயர்களின் மாமன்னர் அக்பர், தம்மைப் புகழ்ந்து பாடுமாறு சூர்தாசரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், கிருஷ்ணரைப் புகழ்ந்து பாடிய வாயால் யாரையும் புகழ்ந்து பாடமாட்டேன் என்று பணிவுடன் சூர்தாசர் மறுத்தார். அக்பரின் அவையில் கிருஷ்ண பக்திப் பாடலைப் பாடிய சூர்தாசர் மதுரா, கௌஹாட் ஆகிய நகரங்களுக்குச் சென்று கிருஷ்ண பக்தியைப் பரப்பினார். கிருஷ்ணர் மீதான ராதையின் காதலை விளக்கிக் கூறும் **ராதா வல்லபி** என்ற பக்திப் பிரிவைத் தோற்றுவித்தார்.

## மீராபாய்



மீராபாய்

இரஜபுத்திர அரச குடும்பத்தை சார்ந்த இவர், வைணவ சமய மரபில் வளர்க்கப்பட்டார். கிருஷ்ணரிடம் மிகுந்த ஈடுபாடு குழந்தைப்பருவம் முதலே ஏற்பட்டது. தமது கருத்துக்களை வட்டார மொழியான **ப்ரிஜ்** மொழியில் பரப்பினார். பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியினின்று விடுபட்டுப் பேரின்ப நிலையை அடைய, கிருஷ்ண பக்தி அவசியம் என்றார். இவரது பக்திப்பாடல்கள் இனிமையானவை. பக்திநெறியை சுவையான பாடல்கள் மூலமாகப் பரப்பினார். எளிய பக்தியும் நம்பிக்கையுமே வீடுபேற்றினை அடைய நல்வழி என்றார். பிறப்பால் எவரும் உயர்ந்தவரில்லை. உயர்வுக்குக் காரணம் அவரவரது செயல்களே என்று கூறினார்.

## குரு ராம்தாசர்



சிவாஜியும் இராமதாசரும்

மகாராஷ்டிராவைச் சேர்ந்த இவர் சத்ரபதி சிவாஜியின் ஆன்மிக குருவாக விளங்கினார். சாதாரண மக்களும் வாழ்க்கைத் தத்துவத்தை அறியும் வகையில் '**தசபோதா**' என்ற நூலை எழுதினார். சமூக சமத்துவத்திற்கு இராம வழிபாடு, அனுமன் வழிபாடு ஆகியவற்றைப் பரப்புவதன் மூலம் உதவ முடியும் என்றார். பகவான்ராம் என்பவரைத் தம் குருவாகக் கொண்டு மகாராஷ்டிரம் முழுவதும் ராம



XII Ethics_Lesson 6.indd 167 16-03-2020 15:01:21

வழிபாட்டையும்,சமத்துவக்கோட்பாடுகளையும் பரப்பினார்.

குரு ராம்தாஸ் மீது அளவற்ற அன்பைக் கொண்டிருந்த மராத்திய மன்னன் சத்ரபதி சிவாஜி உருவாக்கிய பகுதி சஜ்ஜன்காட் என்பதாகும். இச்சொல்லிற்குத் துறவிகளின் கோட்டை என்று பொருள்.

## ஏக்நாதர்

இவர் மகாராஷ்டிர மாநிலத்தில் பைத்தான் என்னும் ஊரில் பிறந்தவர். சிறுவயதிலேயே கிருஷ்ணபக்தி மிகுந்து காணப்பட்டார், அனைத்து பிரிவினரையும் நேசித்தார்.

## துக்காராம்

மகாராஷ்டிராவில் பிறந்த இவர் சிவாஜி, ஏக்நாத் ஆகியோரின் சமகாலத்தவர். பக்தியின் மூலமாகத் தம் போதனைகளைப் பரப்பினார். விஷ்ணுவை **விட்டலா** என்ற பெயரில் வழிபட்டுத் தம் கொள்கைகளை வடிவமைத்தார். தம் ஆன்மிகக் கோட்பாட்டின் மையமாக பந்தர்பூர் என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்தார். இவர் மராத்தி மொழியில் பாடிய பாடல் '**அபங்கம்**' என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இவருடைய பாடல் தொகுப்பு **கீர்த்தனை** எனப்பட்டது. இசைப் பாடலுடன் கூடிய பக்தியின் மூலம் மக்களை ஒருங்கிணைக்க முயன்றார். வேத வேள்விகள், சடங்குகள், புனிதப் பயணங்கள், உருவ வழிபாடு போன்றவற்றை நிராகரித்தார். கடவுள்பற்று, மன்னிக்கும் பக்குவப்பட்ட மனநிலை, மனஅமைதி ஆகியவற்றைப் போதித்தார். சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கோட்பாடுகளையும் பரப்பினார்.

## சூபியிசம்

சூபியிசம் - என்பது அன்பு, ஆழ்ந்த அறிவு, அறநெறி வழிபாட்டை மட்டுமே கொண்ட இஸ்லாமின் பக்திப் பிரிவு ஆகும். இஸ்லாமிய மதத்தை அடிப்படையாகக் கொண்டு பக்திச் சீர்திருத்தங்களைப் பரப்பியது. இஸ்லாமிய சமயநூல் கூறும் சமயச் சடங்குகளைப் புறக்கணித்தது, சாதி, சமய வேறுபாடுகளை எதிர்த்தது, அசைவ உணவு, உயிர்களைப் பலியிடுதல் போன்றவற்றையும் புறக்கணித்தது. " இறைவனை மனக் கண்ணால் அழகு ஆராதனை வடிவமாகக் காண்பதே சூபியிசம்" என்று கே.டி. பார்கவா குறிப்பிடுகிறார்.

## சூபியிசத்தின் தோற்றம்

சூஃபி என்ற சொல் சஃபா என்ற சொல்லிலிருந்து வந்தது. இதற்குத் "தூய" என்பது பொருளாகும். ஒழுக்கமான தூய நெறிகளுடைய வாழ்க்கையை வலியுறுத்துகிறது. இஸ்லாமிய சமயத்தில் தாராள ஆன்மிகத்தை மையப்படுத்திய கோட்பாட்டைக் கூறுகிறது. இதன் மூலம் இந்து முஸ்லீம் ஒற்றுமையைச் சூபிக்கள் நிலைநாட்டினர்.

### சூபியிசத்தின் பிரிவுகள்

சூபியிசத்தில் பக்தியின் அடிப்படையில் ஐந்து பிரிவுகள் உள்ளன. அவையாவன: 1) சிஸ்தி 2) சுகவார்தி 3) குவாதிரி 4) நக்சாபந்தி 5) ஷாதாரி ஆகியவையாகும். இப்பிரிவுகள் இந்தியாவில் இந்து மற்றும் இஸ்லாமியப் பண்பாட்டு இணைப்பிற்குப் பாலமாகச் செயல்பட்டன.

குவாஜா மொய்னுதீன் சிஸ்தி, ஷேக்ஃபரீத், ஷேக் நிசாமுதீன் அவுலியா ஆகியோர் புகழ்பெற்ற சூபி ஞானிகள் ஆவர்.

## சூபியிசத்தின் முதன்மையான கொள்கைகள்

- கடவுள் ஒருவரே
- உலகம் இறைவனின் பிரதிபலிப்பு
- மனிதர்களுக்குச் சேவை செய்வதே உயரிய ஆன்மிகம்
- அன்பே கடவுள், அச்சம் தவிர்க்கும் சொற்களைவிட அச்சம் தவிர்க்கும் செயல்களே முக்கியம்



XII Ethics_Lesson 6.indd 168 16-03-2020 15:01:21

- இறைவனை அடைய மனிதன் உலகப் பற்று, பாசங்களிலிருந்து விடுபட வேண்டும்.
- அனைவருமே அன்பே உருவான இறைவனின் குழந்தைகள் என்ற கருத்தை ஏற்க வேண்டும்.

## சூபியிசத்தின் தாக்கம்

- சமூகம் மற்றும் சமயத்தில் தாராளமயக் கருத்துகள் உருவாக வழிவகுத்தது.
- மனிதநேயத்துடன் கூடிய தேசப்பற்று, சமயப்பற்று போன்றவற்றை மக்களிடம் வளர்த்தது.
- சூபியிசத்தைப் பின்பற்றியோர், ஆதரவற்றோர், விதவைகள், ஏழைகள், போன்றோருக்கு சேவை செய்தனர். அதனால், ஆன்மிக உணர்வையும் மக்களிடத்தில் கொண்டுவந்தனர்.
- இசை, இலக்கியம், கட்டடக்கலை, வட்டாரமொழிகள், புதிய சமய முறைகள் போன்றவை இவர்களால் வளர்ச்சி பெற்றன.
- இந்தியாவில் பன்முகப்பண்பாடு பரவ அடித்தளமிட்டது சூபி இயக்கமாகும்.

இந்துஸ்தானத்தின் பறவை எனப்பட்ட அமீர்குஸ்ரு சிறந்த கவிஞராகவும் சூபியிச ஞானியாகவும் திகழ்ந்தார். பாரசீக, பிரஜ் (Parji) மொழிகளில் இசைப்புலமை பெற்ற இவர் குவாலிஸ் என்ற இசை முறையை உருவாக்கிப் பயன்படுத்தினார். சிதார் என்ற இசைச் கருவியை உருவாக்கினார். சூபியிச வழிபாடு முறை மக்களிடையே பரவ, இசை முக்கியப் பங்காற்றியது.

## நாத யோகா

### யோகா

யோகா என்பது நம் முன்னோர்களான ஞானிகளும், முனிவர்களும், சித்தர்களும் பின்பற்றிய ஒரு வாழ்வியல் நெறியாகும். உடலையும், உயிரையும் ஒன்றாக இணைத்து பரம்பொருளுடன் ஒன்றிணையச் செய்யும் செயல் எனவும் இது கருதப்படுகிறது. யோகாவில் பல்வேறு முறைகள் இருந்தாலும் சிறப்புமிக்க யோகமுறை நாதயோகாவாகும்.

### நாத யோகா

இறைவனை வழிபடும்போது, குரல் நாண்களின் மூலம் மந்திரங்களை ஒலியாக எழுப்பி ராகத்துடனோ, சப்தமாகவோ, மனத்திற்குள்ளேயோ பாடி ஆன்மா, உடல், மனம் ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைக்கின்ற செயலே நாதயோகா எனப்படும்.

### நாதயோகாவினால் ஏற்படும் பயன்கள்

நாதயோகா பயிற்சியை மேற்கொள்வதால், பிராணம் என்ற உயிராற்றல் அதிகரிக்கிறது. மன அமைதி பெற்று உடல் நலத்தைப் பேணுவதற்கு உதவுகிறது.

- தீர்க்க முடியாத மனப் பிரச்சனைகளைத் தீர்க்கிறது.
- வலது மற்றும் இடப்பக்க மூளைப் பகுதியின் செயல்பாட்டைச் சமன்செய்து, மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தித் தடையில்லா உறக்கம் ஏற்பட உதவுகிறது.
- நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாட்டைத் தூண்டச் செய்கிறது.
- சுயவெளிப்பாட்டை தைரியத்துடன் வெளிப்படுத்திப் பேசுகின்ற ஆற்றலைத் தருகிறது.
- சமூகத்தில் தூண்டப்படுகின்ற தவறான நிகழ்வுகளிலிருந்து மனிதன் விடுபட உதவுகிறது.
- தனிமனிதனின் ஒட்டுமொத்த உடலையும் புரிந்துகொண்டு செவித்திறன் அதிகரிக்க உதவுகிறது.
- செவிப்புலன் புரிதலை முழு உடல் கவனிப்பிற்கு ஏதுவாக்குகிறது (இசைக்குத் தகுந்த உடலசைவுகள்)
- நனவுநிலையை அதிகரிக்கச் செய்கிறது (பாடலுக்கேற்ற உடல் அசைவுகளை நினைவில் வைத்து ஆடல் அசைவை



XII Ethics_Lesson 6.indd 169 16-03-2020 15:01:21

வெளிப்படுத்தும் தன்மையை மேம்படுத்துதல்)

- தன்னையறிதல் என்ற நிலையை மேம்பட்டதாக்க உதவுகிறது.
- ஒருவர் தனித்திருக்காமல் தெய்வீகத் தன்மையுடன் இணைந்திருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- பாலினப் பாகுபாட்டுத் தன்மையை நடுநிலைப்படுத்துகிறது (நடன அசைவுகள், அபிநயங்கள் மூலம்)

## பக்தி இயக்கத்தின் விளைவுகள்

நாடுமுழுவதும் பரவிய பக்தி இயக்கத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன அவை

- பக்தி இயக்கத்தின் மூலம் ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமானுஜர், இராமானந்தர், கபீர், குருநானக் உள்ளிட்ட பலரது போதனைகளும், பக்தி நெறிகளும் மக்களைக் கவர்ந்தன.
- விசிஷ்டாத்வைதம், துவைதம், சுத்த அத்வைதம் போன்ற பக்திக்கோட்பாடுகள் இந்து சமயத்தில் புதிய சீர்திருத்தத்தை உருவாக்கின.
- பக்தி இயக்கத்தின் விளைவாகப் பஞ்சாபில் கபீரின் சீடர் குருநானக் என்பவரால் சீக்கிய சமயம் தோற்றுவிக்கப்பட்டது.
- சமய, சாதி வன்முறைகள் குறைந்து சமூக நல்லிணக்கம் ஏற்படத் தொடங்கிய நிகழ்வு பக்தி இயக்கத்தின் முக்கிய விளைவுகளில் ஒன்றாகும்.
- வட்டாரமொழிகளின் வளர்ச்சியும், கலை, கட்டடக்கலை போன்றவற்றின் வளர்ச்சியும் பக்தி இயக்கத்தின் முக்கிய விளைவாகும்.
- கோயில்களில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் சிலைகளும், பன்னிரு ஆழ்வார்களின் சிலைகளும் அழகுற அமைக்கப்பட்டன.
- சமபந்தி உணவுமுறை, ஆலய வழிபாட்டில் சம உரிமை போன்றவைகளைச் சீர்திருத்த முறையில் பக்தி இயக்கம் முன்னெடுத்தது.
- இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட்ட பக்தி இயக்கம் மன்னர்களுக்கு ஆன்மிக நம்பிக்கை வளரக் காரணமானது.
- மக்களிடையே ஆன்மிக நம்பிக்கை வளரவும், சமூக நடவடிக்கைகளில் அவர்களைப் பங்கேற்கச் செய்யவும் பக்தி இயக்கம் வழி வகுத்தது.
- மக்களிடையே அறக்கோட்பாடுகள் அடிப்படையிலான வாழ்வியல் நெறிகளை வளர்க்க பக்தி இயக்கம் உதவியது.
- இந்து மக்களிடையே பக்தி இயக்கத்திற்குக் கிடைத்த வரவேற்பானது பிற்காலத்தில் இந்தியா மதச்சார்பற்ற, ஒன்றுபட்ட நாடாக, மாறுவதற்கு வழி வகுத்தது.

## நிறைவுரை

இந்தியாவில் சமயம், சமூகம், இலக்கியம் ஆகியவற்றிற்குப் பக்தி இயக்கம் மிகுந்த தொண்டாற்றியுள்ளது. சமணம், பௌத்தம், இஸ்லாம் சமயங்கள் வேகமாகப் பரவிய காலத்தில் இந்து சமயத்தின் மறுமலர்ச்சிக்கும் இவ்வியக்கம் வித்திட்டது. வேதங்களின் தத்துவம் மொழிபெயர்க்கப்பட்டு, மக்களிடம் சென்றடைய, பக்தி இயக்கம் காரணமாயிற்று. சமூகத்தில் நிலவிய வேற்றுமைகள் களையப்பட்டு, கடவுள் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு பரவவும், சமூகத்திலுள்ள மூடநம்பிக்கைகள் அகலவும் பக்தி இயக்கம் அடித்தளமிட்டது. பக்தி இயக்கச் சிந்தனைகளே பிற்காலத்தில் சமூக சமய சீர்த்திருத்த இயக்கங்கள் உருவாக வழிவகுத்தன எனலாம்.



XII Ethics_Lesson 6.indd 170 16-03-2020 15:01:21

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் நூல்

   அ) திருவிளையாடற் புராணம்　ஆ) காஞ்சிப்புராணம்　இ) கந்தபுராணம்　ஈ) பெரிய புராணம்

2. உழவாரப் படையை அமைத்தவர்

   அ) திருஞான சம்பந்தர்　ஆ) சுந்தரர்　இ) திருநாவுக்கரசர்　ஈ) மாணிக்கவாசகர்

3. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

   அ) ஜி.யு.போப்　ஆ) சீகன்பால்க்　இ) கால்டுவெல்　ஈ) வீரமாமுனிவர்

4. கீழ்க்காண்பனவற்றுள் சுந்தரருக்குப் பொருந்தாத கூற்றைக் குறிப்பிடுக.

   1) தம்பிரான் தோழர் என்றழைக்கப்பட்டமை

   2) சடையனார் – இசைஞானியாருக்கு மகனாகப் பிறந்தமை

   3) திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னாக மாற்றியமை

   4) நரிகளைப் பரிகளாக மாற்றியமை

UUJN2V

5. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று: இறைவனருளால் திண்ணன், கண்ணப்பனாக மாறினார்.

   காரணம்: சிவபெருமான் கண்களில் ஏற்பட்ட பழுதினை நீக்குவதற்காகத் தம் கண்களை அப்பியதால், கண்ணப்பர் என்றழைக்கப்பட்டார்.

   அ) கூற்று சரி, காரணம் தவறு.　ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

   இ) கூற்று, காரணம் இரண்டும் சரி.　ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

6. பொருத்துக.

   அ. நாச்சியார் திருமொழி – 1. திருமங்கையாழ்வார்

   ஆ. பெருமாள் திருமொழி – 2. நம்மாழ்வார்

   இ. திருவாய்மொழி – 3. ஆண்டாள்

   ஈ. பெரிய திருமொழி – 4. குலசேகர ஆழ்வார்

   அ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3　ஆ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

   இ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3　ஈ) அ – 3, ஆ – 4, இ – 2, ஈ – 1

7. பின்வரும் கூற்றுக்குப் பொருந்தக்கூடிய விடைக்குறிப்பைக் கண்டறிக.

   'தமிழ் செய்த மாறன்' என்று நம்மாழ்வார் அழைக்கப்படக் காரணம்,

   அ) எல்லாச் சமயத்திற்கும் உரியவராகத் திகழ்ந்தமை

   ஆ) நால்வகை வேதங்களையும் தமிழில் பாடியமை

   இ) மாறன் என்னும் குடிப்பெயருடன் விளங்கியமை

   ஈ) திருவாய்மொழி, திருவிருத்தம் போன்ற பக்தி நூல்களை இயற்றியமை



XII Ethics_Lesson 6.indd 171 16-03-2020 15:01:21

8. விப்ரநாராயணர் என்ற இயற்பெயர் கொண்டவர்

அ) பொய்கையாழ்வார் ஆ) பேயாழ்வார்

இ) பூதத்தாழ்வார் ஈ) தொண்டரடிப் பொடியாழ்வார்

9. பொருந்தும் இணையைத் தேர்ந்தெடுக்க.

1) மத்துவர் – வதவாலி

2) ஞானேஷ்வர் – ஞானேஷ்வரி

3) ஜெயதீர்த்தர் – வேதாந்த சங்கிரகம்

4) இராமானுஜர் – சர்வமூலம்

10. அக்பரின் அவையில் இடம்பெற்றிருந்த பக்தி இயக்க ஞானி

அ) கபீர் ஆ) சூர்தாசர் இ) மீராபாய் ஈ) குருநானக்

## சிறுவினா

1. அபரபக்தி என்றால் என்ன ?
2. காரைக்காலம்மையார் பற்றிக் குறிப்பு வரைக.
3. மங்களா சாசனம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
4. பரபக்தி என்றால் என்ன ?
5. வடதளி பூசை என்றால் என்ன ?
6. நாதயோகா என்றால் என்ன ?

## குறுவினா

1. சுந்தரரின் பதிகங்கள் மூலம் அறியும் செய்திகள் யாவை ?
2. நிம்பார்க்கர் யார் ? இவரது பணிகள் யாவை ?
3. சூபியிசத்தின் முதன்மைக் கொள்கைகள் யாவை ?
4. புறச் சந்தானம் என்றால் என்ன ?
5. ஞானேஷ்வர் குறிப்பு வரைக.
6. வீரசைவர்களை ஏன் லிங்காயத்துகள் என்று அழைத்தனர் ?

## நெடுவினா

1. பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள் யாவை ?
2. திருநாவுக்கரசரின் அருஞ்செயல்களை விளக்குக.
3. நாயன்மார்களின் சமயத் தொண்டுகளைக் கூறுக.
4. நாத யோகாவின் பயன்கள் யாவை ?
5. பக்தி இயக்கத்தின் விளைவுகள் யாவை ?



XII Ethics_Lesson 6.indd 172 16-03-2020 15:01:21